# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol: 01 | Issue: 363 | 4 Pages | 25.7.2024 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 01 | இதழ்: 363 | 4 பக்கங்கள் | 25.7.2024 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## மத்திய பட்ஜெட்டில் எந்த மாநிலமும் புறக்கணிக்கப்படவில்லை: நிர்மலா சீதாராமன் பதிலடி

புதுடெல்லி, ஜூலை 25

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் கடந்த 22ந்தேதி தொடங்கியது. இந்த தொடர், ஆகஸ்டு 12 ந்தேதி வரை நடைபெறும். இந்த கூட்டத்தொடரின் முதல் நாளில், நீட் வினாத்தாள் கசிவு உள்ளிட்ட விவகாரங்கள் அவையில் உறுப்பினர்களால் எழுப்பப்பட்டன. இந்த விவகாரத்தில், மத்திய கல்வி மந்திரி தர்மேந்திரபிரதான் விளக்கம் அளித்து பேசினார்.

இந்த சூழலில், நாடாளுமன்ற இரு அவைகளிலும் மத்திய பட்ஜெட் நேற்று தாக்கல் செய்யப்பட்டது. பா.ஜ.க. 3வது முறையாக ஆட்சியமைத்த பின்னர் முதன்முறையாக தாக்கல் செய்யப்பட்ட பட்ஜெட் இதுவாகும்.

இதில், மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் நேற்று காலை 11 மணியளவில் பட்ஜெட்டை தாக்கல் செய்து பேசினார். இதில், சில பொருட்களுக்கு வரி குறைப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டது. எனினும், ஆந்திரபிரதேசம், பீகார் உள்ளிட்ட மாநிலங்களுக்கு சிறப்பு நிதியொதுக்கீடு அறிவிக்கப்பட்டது.



இந்த இரு மாநிலங்களை ஆளும் அரசுகள், மத்தியில் ஆளும் பா.ஜ.க.வுக்கு நேரடி ஆதரவை வழங்கியுள்ளன. இதனால், அந்த மாநிலங்களுக்கு சலுகை அளிக்கப்பட்டு உள்ளது என எதிர்க்கட்சிகளை சேர்ந்தவர்கள் குற்றச்சாட்டு எழுப்பினர். எதிர்க்கட்சிகள் ஆளக்கூடிய மாநிலங்களுக்கு போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்றும் குற்றச்சாட்டாக கூறப்பட்டது.

இந்த சூழலில், மக்களவை இன்று காலை கூடியதும், எதிர்க்கட்சிகளை சேர்ந்த எம்.பி.க்கள் பட்ஜெட் நிதிஒதுக்கீடு விவகாரங்களை எழுப்ப முயன்றனர். எனினும், கேள்வி நேரத்தில் இடையூறு செய்ய கூடாது என மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா எச்சரிக்கை விடுத்து பேசினார்.

நாடாளுமன்ற பாரம்பரிய முறைகளை இருதரப்புகளை சேர்ந்த உறுப்பினர்களும் கடைப்பிடிக்க வேண்டும் என்று அவர் கூறினார். அவை நடவடிக்கைகளுக்கு திட்டமிட்ட முறையில் இடையூறு ஏற்படுத்துகிறீர்களா? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்ற கட்டிடத்திற்குள் நுழைந்து செல்லும் வழியில், எதிர்க்கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், நாடாளுமன்ற இல்லத்திற்குள் நுழைய முடியாத சூழல் ஏற்பட்டது என்று பிர்லா மற்றும் நாடாளுமன்ற விவகார துறை மந்திரி கிரண் ரிஜிஜூ அவையில் எடுத்து கூறினார்.

இந்த விவகாரம் பற்றி எம்.பி.க்கள் பலர் தன்னிடம் கடிதம் வழியே தெரிவித்தனர் என பிர்லா கூறினார். எனினும் அவையில், பட்ஜெட்டுக்கான நிதி ஒதுக்கீடு பற்றிய விவகாரங்களை எழுப்ப எதிர்க்கட்சியினருக்கு அனுமதி மறுக்கப்பட்டதும் அவர்கள் அவை நடவடிக்கைகளை புறக்கணித்து வெளிநடப்பு செய்தனர்.

## இந்தோனேசியாவில் ரிக்டர் 5.0 அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

ஜகார்த்தா, ஜூலை 25

இந்தோனேசியாவின் ஹல்மஹேரா நகரில் நேற்று பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கமானது ரிக்டர் அளவுகோலில் 5.0 ஆக பதிவாகியுள்ளதாக ஜெர்மானிய புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தின் மையம் தரைமட்டத்தில் இருந்து 10 கி.மீ. ஆழத்தில் அமைந்திருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கம் காரணமாக அங்குள்ள வீடுகளில் அதிர்வுகள் உணரப்பட்டன. இதனால் பீதியடைந்த மக்கள் வீதிகளில் தஞ்சம் புகுந்தனர்.

## தைவான் எல்லைக்குள் பறந்த சீன போர் விமானங்கள்



தைபே நகரம், ஜூலை 25

சீனாவின் கட்டுப்பாட்டில் இருந்த தைவான் 1949ல் தனிநாடாகபிரிந்தது. ஆனால் அதனை மீண்டும் தன்னுடன் இணைத்துக் கொள்ள சீனா துடிக்கிறது. அதன்படி தைவான் எல்லையில் போர்க்கப்பல் மற்றும் விமானங்களை அனுப்பி அவ்வப்போது சீனா பதற்றத்தை ஏற்படுத்துகின்றது. ஆனால் சீனா தங்களை தாக்கினால் திருப்பி தாக்குதல் நடத்த தயாராக இருப்பதாக தைவானும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்தநிலையில் தைவானின் எல்லையில் சீனாவுக்குச் சொந்தமான 8 போர்க்கப்பல்கள் மற்றும் 22 விமானங்கள் கண்டறியப்பட்டன. இதில் 15 விமானங்கள் எல்லையைத் தாண்டி தைவானுக்குள் நுழைந்ததாக கூறப்படுகிறது. இதனால் கடல் மற்றும் வான் எல்லை பகுதியை உன்னித்து கவனித்து வருவதாக தைவான் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## கனடாவில் இந்து கோவில் மீது தாக்குதல்



எட்மண்டன், ஜூலை 25

கனடாவின் எட்மண்டன் நகரில் சுவாமி நாராயண் என்ற இந்து கோவில் ஒன்று உள்ளது. இதன் மீது அவதூறு ஏற்படுத்தும் நோக்கில் அடையாளம் தெரியாத நபர்கள் வர்ணங்களை பூசி சேதப்படுத்தி உள்ளனர்.

இதுபற்றி நேபியான் தொகுதிக்கான எம்.பி. சந்திர ஆர்யா கூறும்போது, இந்து மற்றும் கனடா சமூக மக்களுக்கு எதிராக வெறுப்பை தூண்டும் வகையிலான சம்பவங்கள் நேரடியாகவே அதிகரித்து உள்ளன. சுவாமி நாராயண் கோவில் மீது மீண்டும் தாக்குதல் நடத்தப்பட்டு உள்ளது என கூறியுள்ளார்.

கடந்த சில ஆண்டுகளாக, கிரேட்டர் டொரண்டோ பகுதி, பிரிட்டிஷ் கொலம்பியா மற்றும் கனடாவின் பிற பகுதிகளில் வெறுப்பை உமிழ கூடிய வகையில் கோவில் சுவர்களில் ஏதேனும் எழுதுவது உள்பட தாக்குதல்கள் நடந்து வருகின்றன என அதுபற்றி எக்ஸ் சமூக ஊடக பதிவில் வெளியிட்டு உள்ளார்.

கனடா காவல் துறை அதிகாரிகள் இந்த விவகாரத்தில் தீவிர கவனம் செலுத்த வேண்டும். இந்து கனடா மக்களுக்கு எதிராக உடல்ரீதியிலான தாக்குதல்கள் நடைபெறுவதற்கு முன் போலீசார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆர்யா வலியுறுத்தி உள்ளார். இதில், காலிஸ்தானிய பயங்கரவாதிகள் ஈடுபட்டு இருக்க கூடும் என்று அவர் நேரடியான குற்றச்சாட்டையும் தெரிவித்து இருக்கிறார்.

இதேபோன்று, கனடாவின் பொதுமக்கள் சபைக்கான உறுப்பினர் ராண்டி பொய்சான்னால்ட், கோவில் மீது வர்ணம் பூசப்பட்டு, வெறுப்புணர்வு பரப்பப்பட்டு உள்ளது. கனடாவில் வெறுப்புக்கு இடம் இல்லை.

அதுவும் வழிபாடு மற்றும் பிரார்த்தனை செய்யும் இடங்களில் அதற்கு இடம் கிடையாது. நம்முடைய நகரின் மதிப்புக்கு எதிரான மற்றும் தவறான செயல் ஆகும் என்று தெரிவித்து உள்ளார்.

கனடாவில் இதற்கு முன்பும், மிஸ்ஸிசாகா மற்றும் பிராம்ப்டன் பகுதிகளிலும் கோவில்கள் தாக்குதல்களுக்கு இலக்காகி இருக்கின்றன. இதற்கு இந்திய சமூகத்திடம் இருந்து கடுமையான எதிர்ப்புகள் கிளம்பின.

கடந்த ஆண்டு, வின்ட்சாரில் உள்ள இந்து கோவில் ஒன்றின் மீது இந்தியாவுக்கு எதிரான வாசகங்களுடன் அவதூறு ஏற்படுத்தும் வகையில் பாதிப்பு ஏற்படுத்தப்பட்டது. இதற்கு பரவலான கண்டனங்கள் எழுந்தன. உடனடியாக நடவடிக்கை கோரி கனடா மற்றும் இந்திய அதிகாரிகளிடம் கேட்டு கொள்ளப்பட்டது.

## சைபர் தாக்குதலால் லாஸ் ஏஞ்சல்ஸ் கோர்ட்டு முடக்கம்

வாஷிங்டன், ஜூலை 25

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணம் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் ஒருங்கிணைந்த கோர்ட்டு உள்ளது. இங்கு மொத்தம் 36 விசாரணை கோர்ட்டுகள் செயல்படுகின்றன. இந்த நிலையில் அங்குள்ள கம்ப்யூட்டர்களில் சைபர் தாக்குதல் நடத்தப்பட்டது.

எனவே அங்குள்ள அனைத்து கம்ப்யூட்டர்களும் முடங்கின. இதனையடுத்து பொதுமக்களின் தரவு பாதுகாப்பு கருதி லாஸ் ஏஞ்சல்ஸ் கோர்ட்டு உடனடியாக மூடப்பட்டது. இதுகுறித்து சைபர் கிரைம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

நாட்டின் மிகப்பெரிய விசாரணை கோர்ட்டில் சைபர் கிரைம் தாக்குதல் நடந்த சம்பவம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. அதே சமயம் கடந்த வாரம் உலகம் முழுவதும் நடைபெற்ற மைக்ரோசாப்ட் செயலிழப்புடன் இது தொடர்புடையது அல்ல என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## தமிழக மீனவர்கள் கைது: வெளியுறவுத்துறை மந்திரிக்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம்

சென்னை, ஜூலை 25

இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க கோரி தமிழக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின், மத்திய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதி உள்ளார். அந்த கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது,

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 9 மீனவர்கள் 2272024 அன்று INDTN 10MM2517 INDTN10MM284 படகுகளில் மீன்பிடிக்கச் சென்றிருந்த நிலையில் அவர்களும், அவர்களது மீன்பிடிப் படகுகளும் இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர்.



இந்த ஆண்டு ஜனவரி முதல் தற்போது ஜூலை 22ம் நாள் வரை மட்டும் 250 மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த 10 ஆண்டுகளில், ஒரு ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மிக அதிக பட்ச எண்ணிக்கை இதுவாகும்.

மீனவர்கள் இதுபோன்று அச்சுறுத்தப்படுவதும், கைது செய்யப்படுவதும் மற்றும் அவர்களது மீன்பிடிப் படகுகள், கருவிகள் பறிமுதல் செய்யப்படுவதும் தொடர்ந்து தடையின்றி நடைபெற்றுவருகிறது. இதனால் மீனவ மக்கள் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர்.

எனவே, இந்த நிலைமையைத் தணித்திட உரிய தூதரக முயற்சிகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டுமென்றும், பிரச்சினையின் தீவிரத்தை உணர்ந்து இலங்கையிலிருந்து 87 மீனவர்களையும், 175 படகுகளையும் விரைவாக விடுவித்திடத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் மத்திய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கர் அவர்களை, வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# தமிழகத்தை கண்டுக்கொள்ளாத பட்ஜெட்: நிதி ஆயோக் கூட்டத்தை தமிழகம் புறக்கணிக்கிறது: மு.க. ஸ்டாலின்



சென்னை, ஜூலை 25

மத்திய பட்ஜெட் குறித்து முதலமைச்சர் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது,

மத்திய பட்ஜெட் ஏமாற்றத்தை அளித்துள்ளது. தமிழகத்தின் தேவைகளை முன்பே மத்திய அரசுக்கு தெரிவித்து இருந்தோம். மெட்ரோ ரெயில் தமிழகத்திற்கான ரெயில்கள் குறித்து கேட்டிருந்தோம். மெட்ரோ ரெயில் திட்டத்திற்கான நிதியை விடுவிக்க கேட்டிருந்தோம்.

மைனாரிட்டி பாஜக அரசை மெஜாரிட்டி பாஜக அரசாக மாற்றி மாநிலங்களுக்கு மட்டுமே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வெள்ளம் குறித்த 2 மத்திய அமைச்சர்கள் தமிழகத்தில் ஆய்வு செய்து சென்றனர். அதன் பின்னரும் தமிழகத்திற்கு எந்த நிதியையும் ஒதுக்காதது ஏமாற்றத்தை அளிக்கிறது.

மத்திய பட்ஜெட்டில் தமிழ்நாடு என்ற பெயரே உச்சரிக்கப்பட வில்லை. மத்திய அரசின் சிந்தனையிலேயே தமிழகம் இல்லை.

நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு ஒட்டு மொத்தமாக புறக்கணிக்க ப்பட்டதை கண்டிக்கும் வகையில் நிதி ஆயோக் கூட்டத்தில் பங்கேற்க வேண்டாம் என்று முடிவெடுத்திருக்கிறேன். அந்த கூட்டத்தை புறக்கணிக்க போகிறேன். தமிழகத்தின் தேவைகள், உரிமைகளை நிலைநாட்ட மக்கள் மன்றத்தில் தொடர்ந்து நாங்கள் போராடுவோம். நாளை நமது எம்பிகள் டெல்லியில் போராட்டம் நடத்த முடிவெடுத்து ள்ளனர். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# 'தமிழ்நாடு' என்ற வார்த்தையே இடம்பெறாத மத்திய பட்ஜெட்



சென்னை, ஜூலை 24

பாராளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் நேற்று தொடங்கியது. முதல் நாளான நேற்று பொருளாதார ஆய்வறிக்கையை பாராளுமன்றத்தில் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்தார்.

இதன் தொடர்ச்சியாக இன்று மத்திய பட்ஜெட்டை பாராளுமன்றத்தில் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்தார். இதன் மூலம் அவர் தொடர்ந்து 7வது முறையாக பட்ஜெட் தாக்கல் செய்து சாதனை படைத்து உள்ளார்.

இன்று தாக்கல் செய்யப்பட்ட பட்ஜெட்டில் தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ள பாதிப்புக்கு எந்த நிதியும் ஒதுக்கப்படவில்லை. ஒன்றரை மணி நேரம் பட்ஜெட் உரையாற்றிய நிதிஅமைச்சர்நிர்மலா சீதாராமன், தமிழ்நாடு என்ற பெயரை ஒருமுறை கூட உச்சரிக்கவில்லை என அரசியல் நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

பட்ஜெட்டில் ஆந்திராவுக்கு ரூ.15 ஆயிரம் கோடியும், பீகாருக்கு ரூ.26 ஆயிரம் கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆந்திரா மற்றும் பீகாரை தவிர்த்து வேறு மாநிலத்துக்கும் நிதி ஒதுக்கப்படவில்லை. கேரளா, கர்நாடகா, தெலுங்கானா, மேற்கு வங்காளம், மணிப்பூர், பஞ்சாப் உள்ளிட்ட பல மாநிலங்களுக்கு எந்த அறிவிப்பும் வெளியாகவில்லை.

இதனிடையே, வெள்ளத்தடுப்பு பணிகளுக்காக அசாம், இமாச்சல பிரதேசம், உத்ரகாண்ட் ஆகிய மாநிலங்களுக்கு ரூ.11,500 கோடி ஒதுக்கிய நிலையில், கடந்த டிசம்பர் மாதம் வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டிற்கு எந்த நிதியுதவியும் அறிவிக்கப்படாதது கண்டித்துதமிழகத்தை சேர்ந்த எம்.பி.க்கள் அமளியில் ஈடுபட்டனர்.

சென்னை மெட்ரோ 2ம் கட்ட திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு, தாம்பரம் செங்கல்பட்டு விரைவுச் சாலை திட்ட ஒப்புதல், மதுரை, கோவை மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு ஒப்புதல் எதுவும் பட்ஜெட்டில் இடம்பெறவில்லை. இதனிடையே, சமீப காலமாக ரெயில் விபத்துகள் நடந்த போதும் மத்திய பட்ஜெட்டில் ரெயில்வே துறைக்கான எந்த அறிவிப்பும் வெளியாகவில்லை. முன்னதாக, தமிழ்நாட்டில் நிலுவையில் உள்ள திட்டங்கள் உள்ளிட்டவற்றை நிறைவேற்ற வலியுறுத்தி கடந்த 21ந்தேதி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஏ.டி.எம்., எந்திரத்தில் கூடுதலாக வந்த ரூ.10 ஆயிரத்தை போலீசில் ஒப்படைத்த பள்ளி மாணவர்கள்



தாராபுரம்: ஜூலை 25

திருப்பூர் மாவட்டம் அலங்கியம் அருகே காந்தி நகரில் உள்ள ஒரு ஏ.டி.எம். மையத்தில் அலங்கியம் பகுதியைச் சேர்ந்த ஹரிபிரசாத் (வயது 28) என்பவர் பணம் எடுக்க சென்றிருந்தார். எதிர்பாராதமாக பணம் வராததால் ஏ.டி.எம். கார்டை மட்டும் எடுத்துக்கொண்டு பணத்தை எடுக்காமல் சென்று விட்டார். அதன் பின்னர் அங்கு பணம் எடுக்கச் சென்ற 12ம் வகுப்பு மாணவர்களான முகிலன், கவுஷிக் இருவரும் பணம் எடுத்த போது கூடுதலாக ரூ.10 ஆயிரம் வந்திருந்தது. இதனால் அவர்கள் எடுக்க வேண்டிய பணத்தை வைத்துக் கொண்டு மீதமுள்ள 10 ஆயிரம் ரூபாயை அலங்கியம்போலீஸ்நிலையத்தில் கொண்டு ஒப்படைத்தனர்.

இதைத்தொடர்ந்து இன்ஸ்பெக்டர் சேகர் மற்றும் போலீசார்

ஏ.டி.எம். மையத்தில் உள்ள கண்காணிப்பு கேமரா காட்சிகளை வைத்து விசாரித்து ஹரிபிரசாரத்தை வரவழைத்து மாணவர்கள் முன்னிலையில் அந்த 10 ஆயிரம் ரூபாயை அதன் உரிமையாளரான ஹரிபிரசாத்திடம் ஒப்படைத்தனர். மேலும் கூடுதல் பணத்தை ஒப்படைத்த அரசு மேல்நிலைப்பள்ளியில் படிக்கும் 2 மாணவர்களையும் போலீசார் மற்றும் பொதுமக்கள் பாராட்டினர்.

# மின் கட்டண உயர்வை எதிர்த்து சென்னையில் 9 இடங்களில் அ.தி.மு.க. கண்டன ஆர்ப்பாட்டம்



சென்னை: ஜூலை 25

மின்சார கட்டண உயர்வு மற்றும் ரேசன் கடைகளில் பருப்பு, பாமாயில் போன்றவற்றை நிறுத்த முயற்சிப்பதாக கூறி தி.மு.க. அரசை கண்டித்து அ.தி.மு.க. சார்பில் இன்று தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் கண்டன ஆர்ப்பட்டம் நடத்தப்படும் என்று அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்து இருந்தார்.

அதன்படி கட்சி மாவட்டங்கள் அடிப்படையில் இன்று காலையில் மாவட்ட செயலாளர்கள், முன்னாள் அமைச்சர்கள் தலைமையில் தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடந்தது. ஒருங்கிணைந்த சென்னை மாவட்டத்தில் 9 இடங்களில் தி.மு.க. அரசை கண்டித்து போராட்டம் நடந்தது.

வடக்கு மாவட்டம் வட சென்னை மாவட்டம் சார்பில் மாவட்ட செயலாளரும் முன்னாள் அமைச்சருமான டி.ஜெயக்குமார் தலைமையில் பழைய வண்ணாரப்பேட்டை கிருஷ்ணா தியேட்டர் அருகில் ஆர்ப்பாட்டம் நடந்தது. இதில் மாவட்ட நிர்வாகிகள் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

வடசென்னை தெற்கு (மேற்கு) மாவட்டத்தின் சார்பில் அமைப்பு செயலாளரும், மாவட்ட செயலாளரு

மான ந.பாலகங்கா தலைமையில் தங்கசாலை மணிக்கூண்டு அருகில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

தண்டையார்பேட்டை வைத்தியநாதன்பாலம் அருகில் வடசென்னைமாவட்ட செயலாளர் ஆர்.எஸ். ராஜேஷ் தலைமையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் தொண்டர்கள் கலந்து கொண்டு கண்டன கோஷங்களை எழுப்பினார்கள்.

தென்சென்னை மாவட்ட செயலாளர் ஆதிராஜாராம் தலைமையில் அண்ணா சாலை தாராபூர் டவர் அருகில் தி.மு.க. அரசை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடந்தது.

தென்சென்னை (தெற்கு) மாவட்ட செயலாளர் எம்.கே.அசோக் தலைமையில் வேளச்சேரி காந்தி சிலை அருகில் மின் கட்டண உயர்வை குறைக்கக் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சென்னை புறநகர் மாவட்டசெயலாளர்கே.பி. கந்தன் தலைமையில் பள்ளிக்கரணை மாநகராட்சி அலுவலகம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

வடசென்னை வடக்கு (மேற்கு) மாவட்ட செயலாளர் டி.ஜி.வெங்கடேஷ்பாபு தலைமையில் கொளத்தூரில் அண்ணாசிலை அருகில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

தென்சென்னை தெற்கு (மேற்கு) மாவட்ட செயலாளர் வி.என்.ரவி தலைமையில் எம்.ஜி.ஆர்.நகரில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.

தென்சென்னை மாவட்ட செயலாளர் தி.நகர் சத்யா தலைமையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் கண்டன கோஷங்களை எழுப்பினார்கள். இதேபோல காஞ்சீபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், கோவை, மதுரை, சேலம், திருச்சி, நெல்லை, கன்னியாகுமரி, கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, வேலூர் உள்ளிட்ட அனைத்து மாவட்டங்களிலும் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள், மாவட்ட செயலாளர்கள் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டு அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினார்கள்.

# கோட்டாட்சியர் அலுவலகத்தில் கிராம நிர்வாக அலுவலர்கள் விடிய விடிய உள்ளிருப்பு போராட்டம்



கடலூர், ஜூலை 25

தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலர்கள் சங்கத்தின் சார்பில் டிஜிட்டல் கிராப் சர்வே பணியில் அதற்கான உபகரணங்கள் சர்வே உட்பிரிவு ஒன்றுக்கு ரூ.10 வழங்கும் பட்சத்தில் இப்பணியை செய்ய இயலும் என தீர்மானம் வழங்கிய நிலையில், இப்பணியைசெய்யாததொண்டமாநத்தம் கிராம நிர்வாக அலுவலர் ஜெயராமமூர்த்தியை எந்த ஒரு விளக்கமும் இல்லாமல், பணியிடை நீக்கம் செய்த கடலூர்கோட்டாட்சியரை கண்டித்தும், அவரை உடனடியாக பணியில் சேர்க்க வலியுறுத்தியும் கிராம நிர்வாக அலுவலர்கள் சங்கத்தினர் பல்வேறு கட்ட போராட்டங்களை நடத்தினர். மேலும் கலெக்டரிடம் மனு அளித்தும் இது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதனால் கிராம நிர்வாக அலுவலர்கள் சங்கத்தினர் நேற்று மாலை முதல் கடலூர் கோட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பேச்சு வார்த்தை நடத்த, யாரும் வராததால், விடிய விடிய தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் தற்போது வரை அவர்கள் போராட்டத்தை தொடர்ந்து வருகின்றனர்.

இது குறித்து மாவட்ட செயலாளர் ஜெயராமன் கூறுகையில், கிராம நிர்வாக அலுவலர் ஜெயராமமூர்த்தி என்பவரை பணியிட நீக்கம் செய்யப்பட்டதை ரத்து செய்து அவருக்குஉடனடியாகஆணை வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி மாவட்டம் முழுவதும் உள்ள கிராம நிர்வாக அலுவலர்களை அழைத்து போராட்டம் தொடர்ந்து நடைபெற உள்ளது என தெரிவித்தார்.

கிராம நிர்வாக அலுவலர்கள் போராட்டம் 2வது நாளாக இன்றும் தொடர்வதால் வருவாய் துறையின் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளது.

# மங்கலம் சாலையில் ஆக்கிரமிப்புகள் அகற்றம்



திருப்பூர், ஜூலை 25

திருப்பூர் மங்கலம் சாலையில் அதிக அளவில் ஆக்கிரமிப்புகள் இருந்ததால் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுவதாக மாநகராட்சிக்கு தொடர்ந்து புகார்கள் வந்தன.

இதையடுத்து மாநகராட்சி கமிஷனர் பவன்குமார் கிரியப்பனவர் உத்தரவின் பேரில் மாநகராட்சி அதிகாரிகள் ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்ற வேண்டும் என 2 முறை நோட்டீஸ் வழங்கினர். இருந்தபோதிலும் ஆக்கிரமிப்புகள் அகற்றப்படாமல் இருந்தது.

இந்தநிலையில் இன்று காலை மாநகராட்சி அதிகாரிகள் 3 பொக்லைன் எந்திரங்கள் மூலம் அதிரடியாக ஆக்கிரமிப்புகளை அகற்றினர். இதற்கு ஒரு சில கடைக்காரர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதனால் அதிகாரிகளுக்கும் கடைக்காரர்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இதனையடுத்து அங்கு பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டது. தொடர்ந்து போலீஸ் பாதுகாப்புடன் மாநகராட்சி அதிகாரிகள் ஆக்கிரமிப்புகளை அதிரடியாக அகற்றினர்.

# குற்றம் செய்தவருக்கு வினோத தீர்ப்பை வழங்கிய முஸ்லிம் ஜமாத்




கன்னியாகுமரி, ஜூலை 25

கன்னியாகுமரி மாவட்டம் திருவிதாங்கோடு அடுத்துள்ள ஒரு காலணியில் 6 வயது இளம்பிள்ளையை 60 வயது மதிக்கத்தக்க நபரால் கற்பழிக்கப்பட்டுள்ளார் இது வெளியே தெரிந்து விசயம் விஸ்வரூபம் எடுத்து திருவிதாங்கோடு முஸ்லிம் ஜமாத்திற்கு சென்றுள்ளது திருவிதாங்கோடு முஸ்லிம் ஜமாத்துடைய தலைவர் அன்வர் உசேன், செயலாளர் டாக்டர் யூசுப் மற்றும்கமிட்டி இணைந்து தமிழகத்தில் முன்பு பல குக்கிராமங்களில் நடந்த நாட்டாமை தீர்ப்புபோல் இரவு 1.30 மணிக்கு தீர்ப்பு வழங்கி உள்ளார்கள். என்ன தீர்ப்பு என்றால் குற்றம் செய்யப்பட்ட குற்றவாளியை காவல் நிலையத்தில் ஒப்படைக்காமல் குற்றம் செய்த குற்றவாளியை ஜமாத் அலுவலகத்தில் தூணில் கட்டி வைத்து அவருடைய உறவுகளை அழைத்து பாதிக்கப்பட்ட குழந்தைக்கு குற்றவாளியின் காலணி வீட்டை 6 லட்சம் ரூபாய்க்கு இரவோடு இரவாக விற்று அதில் மூன்று லட்சத்தை பாதிக்கப்பட்ட குழந்தைக்கு கொடுக்க வேண்டும் என்று நாட்டாமை தீர்ப்பு செய்தது போல் ஒரு நாசக்கார தீர்ப்பை கூறி தமிழகத்திலும் இப்படி ஒரு தீர்ப்பா ? இந்த காலத்திலும் என்று மக்கள் வியக்கும் வண்ணம் ஒரு அதிரடி தீர்ப்பை வழங்கி உள்ளார்கள். தமிழக அரசும் காவல்துறையும் உடனே விரைந்து நடவடிக்கைகள் எடுத்து பாதிக்கப்பட்ட இளம் பெண்ணுக்கு நியாயம் கிடைக்கவும், குற்றவாளிக்கு தங்க தண்டனை கிடைக்கவும், அத்தோடு இதுபோன்ற தீர்ப்பை வழங்கிய ஜமாத் நிர்வாகிகளுக்கு தக்க தண்டனை கிடைக்கும் வண்ணம் வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்கவும் தமிழக அரசும் காவல்துறையும் முன் வந்து விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொது மக்கள் கேட்டுக் கொண்டனர்.



கன்னியாகுமரி மாவட்டம் தக்கலை அருகே ஈத்தங்காடு பகுதியை சேர்ந்த வழக்கறிஞர் கிறிஸ்டோபர் ஜோபி மீது ஐந்து பேர் கொண்ட கும்பல் கொலை வெறி தாக்குதல் நடத்தியதில் படுகாயம் அடைந்த வழக்கறிஞர் தக்கலை அருகே உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார் இது சம்பந்தமாக அவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் கொற்றிக்கோடு காவல் நிலைய உதவி ஆய்வாளர் விசாரணை நடத்தி வருகிறார்.



கேரளாவில் நிபா வைரஸின் பரவல் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், வைரஸ் தமிழகத்திலும் பரவாமல் இருக்க மாநில எல்லைகளில் சுகாதாரத் துறையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். அந்த வகையில் குமரி கேரள தமிழக எல்லையான களியக்காவிளை பகுதியில் கேரளாவில் இருந்து வருபவர்களுக்கு காய்ச்சல் உள்ளதா என சுகாதாரத் துறையினர் பரிசோதனை செய்து தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

# சென்னையில் பரவும் மர்ம காய்ச்சலுக்கு கொசு உற்பத்தியே முக்கிய காரணம்

சென்னை, ஜூலை 25

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் கடந்த சில வாரங்களாக அவ்வப்போது பெய்து வரும் மழை காரணமாக தட்பவெட்ப நிலை மாறியுள்ளது. இதனால் சளி, இருமல், காய்ச்சல் உள்ளிட்டவை பரவி வருகிறது. தொண்டை வலி, இருமலுடன் தாக்கும் இந்த மர்ம காய்ச்சல் சென்னையில் பரவுவதற்கு கொசு உற்பத்தியே முக்கிய காரணமாக கருதப்படுகிறது.

மேலும் சென்னையில் சில இடங்களில் டெங்கு காய்ச்சலும் பரவி வருகிறது. கோடம்பாக்கம் மண்டலத்தில் 8 மாத குழந்தை மற்றும் 8 வயது சிறுவன் ஆகியோருக்கு டெங்கு பாதிப்புகண்டறியப்பட்டு உள்ளது.

ஆலந்தூர் மற்றும் அடையாறு மண்டலங்களிலும் சிலருக்கு டெங்கு பாதிப்பு இருக்கிறது.

சென்னையில் திருவொற்றியூர், மணலி, மாதவரம், அம்பத்தூர் ஆகிய மண்டலங்களிலும், தாம்பரம், ஆவடி மாநகராட்சிகளிலும் பலருக்கு சளி, இருமலுடன் மர்ம காய்ச்சல் பரவி வருகிறது.

மர்மகாய்ச்சலை கட்டுப்படுத்தவும், பருவமழை தொடங்க உள்ள நிலையில் சுகாதார பணிகளை முடுக்கி விடவும், சென்னை மாநகராட்சி முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

ஆலந்தூர், பெருங்குடி மண்டலங்களில் வாரத்திற்கு ஒருமுறை குடிநீரின் மாதிரி சேகரிக்கப்பட்டு அதில்பாக்டீரியா, வைரஸ் தொற்று இருக்கிறதா என பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது.

திருவொற்றியூர், மணலி மண்டலங்களில் தினமும் குடிநீரின் தரம் பரிசோதிக்கப்படுகிறது. அண்ணாநகரிலும் அவ்வப்போது பரிசோதனை செய்யப்படுகிறது. ஆவடியில் 3 மாதங்களுக்கு ஒரு முறையும் குடிநீரில் கழிவு நீர்கலந்து இருக்கிறதா என ஆய்வு செய்யப்படுகிறது.

அதற்கு ஏற்றபடி குடிநீர் வாரியத்துடன் இணைந்து குடிநீர் தொட்டிகள் சுத்தப்படுத்தப்பட்டு, தேவையான அளவு குளோரின் கலந்து, சுத்தமான குடிநீர் வழங்கும் வகையில் சென்னை மாநகராட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது.

சென்னையில் கொசுக்கள் உற்பத்தி அதிகரித்து வரும் பகுதிகளில் கொசு ஒழிப்பு புகை அடிப்பது உள்ளிட்ட பணிகளும் மாநகராட்சி மூலம் நடந்து வருகின்றன.

# மக்கள் விரோதப் போக்கில் செயல்படும் நிர்வாகத் திறனற்ற திமுக அரசு எடப்பாடி பழனிச்சாமி கண்டனம்



சென்னை, ஜூலை 25

அதிமுக பொது செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் கூறியிருப்பதாவது,

மூன்று ஆண்டுகளில் மூன்று முறை மின் கட்டணத்தை உயர்த்தி, மக்களை நேரடியாகவும், மின் கட்டண உயர்வால் ஏற்படும் விலைவாசி உயர்வால் மறைமுகமாகவும் வாட்டி வதைக்கின்ற மு.க. ஸ்டாலின் தலைமையிலான விடியா திமுக அரசை கண்டித்து

அதிமுக சார்பில் கழக அமைப்பு ரீதியாக உள்ள 82 மாவட்டங்களிலும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் இன்று நடைபெறுகிறது.

அன்று எதிர்க்கட்சித் தலைவராக "ஷாக் அடிப்பது மின்சாரமா மின் கட்டணமா" என்று ஸ்டாலின் கேட்ட கேள்விக்கு, இன்று முதல்வராக இருக்கும் அவருக்கு, இந்த விடியா ஆட்சியில் "ஷாக்அடிக்கும் _ மின்கட்டணம்" என்று மக்கள் பதில் அளிக்கின்றனர்.

நிர்வாகத் திறமையின்மையே உருவான இந்த அரசு, ஒருபுறம்மின்கட்டணசுமையை மக்கள் மீது ஏற்றியதுடன், மறுபுறம் அத்தியாவசிய பொருட்களான துவரம் பருப்பும் பாமாயிலும் 3 மாதங்களாக ரேஷன் கடைகளில் கிடைக்காமல் அல்லல்படுத்துகிறது.

போதைப்பொருள் எங்கும் கிடைக்கும் விடியா திமுக ஆட்சியில் பருப்பு_ பாமாயில் _ எங்கே ஸ்டாலின் என்று மக்கள் கேட்கிறார்கள்

மின் கட்டணத்தை உயர்த்தியும் ரேஷன் கடைகளில் பருப்பு பாமாயில் வழங்கப்படுவதை நிறுத்த முயற்சித்தும் மக்கள் விரோதப் போக்கில் செயல்படும் நிர்வாகத் திறனற்ற விடியா திமுக அரசுக்கு எனது கடும் கண்டனம்.

அநியாயமாக மக்கள் தலையில் சுமத்தப்படும் மின் கட்டண உயர்வைத் திரும்பப் பெறுமாறும், ரேஷன் கடைகளில் துவரம் பருப்புபாமாயில் ஆகியவை தடையின்றி கிடைப்பதை உறுதிசெய்யுமாறும் விடியா திமுக முதல்வரை வலியுறுத்துகிறேன் என்று கூறியுள்ளார்.

# புவனகிரி அருகே மூதாட்டி வீட்டின் ஓட்டை பிரித்து 20 பவுன் நகைபணம் கொள்ளை



புவனகிரி, ஜூலை 25

புவனகிரி அருகே வீட்டின் ஓட்டை பிரித்து 20 பவுன் நகை கொள்ளையடிக்கப்பட்டது.

கடலூர் மாவட்டம் புவனகிரி அருகே உள்ள பு. மணவெளி கிராமத்தை சேர்ந்தவர் பாண்டு ரங்கன். இவர் இறந்து விட்டார். இவரது மனைவி பூபதி (70). இவர்களுக்கு 5 மகன்கள் உள்ளனர். அவர்கள் அனைவரும் வெளியூரில் வசித்து வருகின்றனர். பூபதி மட்டும் வீட்டில் தனியாக வசித்து வந்தார்.

நேற்று இரவு பூபதி வீட்டில் தூங்கி கொண்டிருந்தார். நள்ளிரவு அங்கு வந்த மர்ம நபர்கள் வீட்டின் ஓட்டை பிரித்து உள்ளே இறங்கினர்.

பின்னர் பீரோவை உடைத்து அதில் வைக்கப்பட்டிருந்த 20 பவுன் நகை மற்றும் ரூ. 15 ஆயிரம் பணத்தை கொள்ளையடித்து சென்று விட்டனர்.

இன்று அதிகாலை எழுந்த பூபதி நகை, பணம் கொள்ளையடிக்கப்பட்டு இருந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தார். அவர் சத்தம் போடவே அருகே வசித்து வருபவர்கள் அங்கு வந்தனர். அவர்கள் உதவியுடன் பூபதி புவனகிரி போலீசில் புகார் செய்தார். போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து விசாரணை நடத்தினர். நகை, பணத்தை கொள்ளையடித்து சென்ற மர்ம நபர்களை போலீசார் தேடி வருகிறார்கள். இந்த சம்பவம் பு. மணவெளி பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# தனுஷ்கோடியில் ஆபத்தை அறியாமல் `செல்பி' எடுக்கும் சுற்றுலாப் பயணிகள்



ராமேசுவரம், ஜூலை 25

ராமநாதபும் மாவட்டம் ராமேசுவரம் இந்திய அளவில் புனித ஸ்தலமாகவும், சுற்றுலாப் பகுதியாகவும் உள்ளது. இங்கு ஆண்டுக்கு 2.50 கோடி வரைபக்தர்கள்மற்றும்சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர்.

ராமேசுவரம் ராமநாதசுவாமி கோயிலுக்கு வரும் அனைவரும் தனுஷ்கோடி, அரிச்சல்முனை, முகுந்தராயர் சந்திரம் ஆகிய பகுதிகளுக்கு சென்று கடல் அழகை ரசித்து வருகின்றனர்.

இந்நிலையில், பல கோடி மதிப்பிட்டில் 2017 ஆண்டு முகுந்தராயர் சந்தரம் பகுதியில் மீன் இறங்கு தளம் அமைக்கப்பட்டது. இந்த பணி தொடங்கும் நிலையில் மீனவர்கள் இந்த பகுதியில் மீன் இறங்கு தளம் அமைத்தால் சேதமடைந்துவிடும் என மீன்வளத்துறை அதிகாரிகளிடம் அறிவுறுத்தினர். ஆனால் இதனை பொருட்படுத்தாமல் கட்டுமான தொடங்கி முடிக்கப்பட்டது.

இந்த நிலையில், தொடந்து கடல் சீற்றத்தின் காரணமாக டி வடிவில் அமைக்கப்பட்ட பாலம் ஒரு பகுதி உடைந்து கடலுக்குள் விழுந்து விட்டது. மற்றொரு பகுதி உடைந்து கடலுக்குள் விழும் நிலையில் உள்ளது.

பாலத்தின்சேதமடைந்த பகுதியில் அலைகள் சீற்றத்துடன் மோதி 15 அடி உயரம் வரை மேல் எழும்புகின்றனர். சூறாவளி காற்று வீசம் நேரத்தில் இதன் தாக்கம் அதிகமாக இருக்கும். ஆட்களை இழுத்து செல்லும் அளவிற்கு கடல் அலைகள் ஆக்ரோஷமாக எழும்புகின்றன.

இதன் ஆபத்தை உணராமல் முகுந்தராயர் சத்திரத்துக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் பக்தர்கள் ஆர்வத்துடன் பாலத்தில் நடந்து சென்று பார்ப்பதுடன் பெண்கள், குழந்தைகளுடன் சென்று செல்பி எடுத்துக்கொள்ளுகின்றனர்.

பாலம் உறுதி தன்மை இல்லாத நிலையில் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் செல்லுவதால் பாலம் சேதமடைந்து கடலில் விழுந்தால் யாரையும் காப்பற்ற முடியாது.

இதுகுறித்து அப்பகுதி மீனவர்கள் எச்சரித்தாலும் அதனை சுற்றுலாப் பயணிகள் பொருட்படுத்துவதில்லை. எனவே சேதமடைந்து பாலத்திற்கு யாரும் செல்ல முடியாத நிலையில் தடுப்பு அமைக்க வேண்டும் என்று கோரிக்கை எழுந்துள்ளது.

# புதுமாப்பிள்ளை கொலையில் நண்பர் அதிரடி கைது



தக்கலை, ஜூலை 25

குமரி மாவட்டம் தக்கலை அருகே உள்ள அமராவதியை சேர்ந்தவர் மகேஷ்(வயது38). வெளிநாட்டில் எலக்ட்ரீசியனாக வேலை பார்த்து வந்த இவர், தனது மனைவி ஷோபியுடன் தக்கலையில் உள்ள வட்டம் அண்ணா நகரில் ஒரு வீட்டின் மாடியில் வசித்து வந்தார். இந்தநிலையில் நேற்று முன்தினம் வீட்டின் மொட்டை மாடியில் மகேஷ்கத்திக்குத்துகாயங்களுடன் பிணமாக கிடந்தார்.

இதுகுறித்து தகவலறிந்த தக்கலை போலீசார் சம்பவ இடத்துக்கு வந்து மகேசின் உடலை கைப்பற்றி விசாரணை நடத்தினர். அப்போது அவருக்கு முதலில் திருமணமாகி மனைவி பிரிந்து விட்டதும், அதன்பிறகு விமானத்தில் ஏற்பட்ட பழக்கத்தில் சென்னையை சேர்ந்த ஷோபி என்பவரை 2வது திருமணம் செய்திருப்பதும் தெரியவந்தது.

ஷோபி தனது பெற்றோரை பார்க்க சென்னை சென்றிருந்த நேரத்தில் தான் மகேஷ் கொலை செய்யப்பட்டுள்ளார். எனவே அந்த நேரத்தில் வீட்டுக்கு வந்தது யார்? என்று போலீசார் விசாரணையில் இறங்கினர். சம்பவ இடத்திலும், மகேசின் வீட்டிலும் மது பாட்டில்கள் கிடந்ததால், அவர் நண்பர்களுடன் மது அருந்தி இருக்கலாம் என்றும், அப்போது ஏற்பட்ட தகராறில் கொலை நடந்திருக்கலாம் எனவும் போலீசார் கருதினர்.

அதனடிப்படையில் கொலையாளிகள் யார் என்று விசாரணை நடத்தப்பட்டது. கொலையாளிகளை பிடிக்க துணை போலீஸ் சூப்பிரண்டு உதயசூரியன், இன்ஸ்பெக்டர் ராமச்சந்திரன், சப்இன்ஸ்பெக்டர் அருளப்பன் ஆகியோர் தலைமையில் 3 தனிப்படைகள் அமைக்கப்பட்டன.

தனிப்படை போலீசார் பல்வேறு கோணங்களில் தீவிர விசாரணை நடத்தியதில் திருவிதாங்கோடு மல்லன்விளையை சேர்ந்த மெக்கானிக் பெனிட்(27), பொற்றைகாட்டுவிளை பெயிண்டர் திரேன்ஸ்(23), மல்லன் விளை பிபின் ஜேக்கப்(23) ஆகிய3பேருக்குதொடர்பு இருப்பது தெரியவந்தது. அதன் அடிப்படையில் அவர்கள் 3 பேர் மீதும் போலிசார் வழக்குப்பதிவு செய்து அவர்களை தேடி வந்தனர்.

கேரளா மற்றும் சென்னைக்கு விரைந்த தனிப்படையினர் தீவிரமாக விசாரித்து வந்தனர்.

இந்தநிலையில் மகேசின் உறவினர்கள் நேற்று தக்கலை போலீஸ் நிலையத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். கொலையாளிகளை கைது செய்யும் வரை உடலை வாங்க மாட்டோம் என்று அவர்கள் கூறினர்.

அவர்களை போலீசார் சமரசம் செய்து அனுப்பி வைத்தனர். தொடர்ந்து அங்கிருந்து கலைந்து சென்ற அவர்கள், மகேஷ் உடல் வைக்கப்பட்டு இருந்த ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு வந்து தங்கள் கோரிக்கையை வலியுறுத்தி போராட்டம் நடத்தினர். இதனால் பரபரப்பு ஏற்பட்டது.

இந்தநிலையில் மகேஷ் கொலையில் தேடப்பட்ட பிபின் ஜேக்கப், கோவையில் பதுங்கிருப்பது செல்போன்சிக்னல்மூலம் தனிப்படை போலீசாருக்கு தெரியவந்தது. இதனையடுத்து தனிப்படையினர் கோவை விரைந்தனர். அவர்கள் பிபின் ஜேக்கப் தங்கியிருந்த வீட்டை நள்ளிரவில் சுற்றி வளைத்தனர்.

பின்பு வீட்டுக்குள் இருந்த பிபினை கைது செய்தனர். கைது செய்த அவரை தனிப்படை போலிசார் இன்று காலை தக்கலைக்கு அழைத்து வந்தனர். அவரிடம் துணை போலீஸ் சூப்பிரண்டு உதயசூரியன் தீவிர விசாரணை நடத்தி வருகிறார்.

பிபின் ஜேக்கப் தெரிவித்த தகவலின் அடிப்படையில் மற்ற 2 பேரையும் பிடிக்க தனிப்படை போலீசார் தேடுதல் வேட்டையில் இறங்கி உள்ளனர். விரைவில் அவர்கள் பிடிபடுவார்கள் என்று போலீசார் தெரிவித்தனர்.

# தாராபுரத்தில் பஞ்சாயத்து தலைவி தர்ணா போராட்டம்



தாராபுரம், ஜூலை 25

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் ஒன்றியத்துக் குட்பட்ட கவுண்டச்சிபுதூர் பஞ்சாயத்தில் ரூ.2¾ கோடி நிதி உள்ளது. அந்த பஞ்சாயத்தில் உள்ள 9 வார்டுகளில் வளர்ச்சி திட்டப்பணிகள்மேற்கொள்ள தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் நிர்வாக அனுமதிக்காக நிதியை விடுவிக்க கோரி பஞ்சாயத்து நிர்வாகம் சார்பில் வட்டார வளர்ச்சி அதிகாரிக்கு (கிராம ஊராட்சி) பல கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் அதற்கு உரிய அனுமதியளிக்கப்படவில்லை.

இதையடுத்து கவுண்டச்சிபுதூர் பஞ்சாயத்து தலைவி செல்வி ரமேஷ் நேற்று மதியம் முதல் தாராபுரம் ஒன்றிய அலுவலக வளாகத்தில் தரையில் அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டார். அவர் கூறுகையில், கடந்த 3 வருடங்களாக கவுண்டச்சிபுதூர் பஞ்சாயத்தில் ரூ.2.75 கோடி வளர்ச்சி நிதிக்கு நிர்வாகம் அனுமதி வழங்கப்படவில்லை. இதனால் கவுண்டச்சிபுதூர் பஞ்சாயத்துக்கு எந்த வளர்ச்சி பணிகளும் செய்ய இயலவில்லை. எனவே அந்த நிதியை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி தொடர் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்தார்.

இது குறித்த தகவல் அறிந்ததும் போலீசார் மற்றும் அதிகாரிகள் சென்று பேச்சுவார்த்தை நடத்தினர். ஒன்றிய அலுவலக மேலாளர், கலெக்டருக்கு கடிதம் எழுதியுள்ளதாகவும், விரைவில் அனுமதி கிடைத்துவிடும் எனதெரிவித்தார். இதை பஞ்சாயத்து தலைவி செல்வி ரமேஷ் ஏற்கவில்லை. தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டார்.

நேற்றிரவும் அவர் தாராபுரம் ஒன்றிய அலுவலக வளாகத்தில் அமர்ந்து போராட்டத்தை தொடர்ந்தார். இன்று 2வது நாளாக போராட்டம் நீடிக்கிறது. இதனால் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. பஞ்சாயத்திற்கு வழங்க வேண்டிய நிதியை வழங்கும் வரை தொடர் தர்ணா போராட்டத்தில் ஈடுபட உள்ளதாக செல்வி ரமேஷ் தெரிவித்துள்ளார்.

# முதலமைச்சரை அவதூறாக பேசிய வழக்கு சி.வி. சண்முகம் கோர்ட்டில் ஆஜர்



விழுப்புரம், ஜூலை 25

தமிழக முதலமைச்சரை அவதூறாகவும், தமிழக அரசை விமர்சித்து பேசியதாக அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் சி.வி. சண்முகம் எம்.பி., மீது விழுப்புரம் மாவட்ட முதன்மை அமர்வு நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கு இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது சி.வி. சண்முகம் எம்.பி. விழுப்புரம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் நேரில் ஆஜரானார்.

விசாரணையின் போது சென்னை உயர்நீதி மன்றத்தில் உள்ள தடை ஆணை ஆவணங்களை விழுப்புரம்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார்.

இதையடுத்து வழக்கு விசாரணையை அடுத்த மாதம் 13ந் தேதிக்கு ஒத்தி வைத்து விழுப்புரம் நீதித்துறை நடுவர் நீதிமன்ற நீதிபதி ராதிகா உத்தரவிட்டார்.

# ராமேசுவரம் மீனவர்கள் 9 பேரை சிறைபிடித்த இலங்கை கடற்படை



ராமேசுவரம், ஜூலை 25

பாக் ஜலசந்தி, மன்னார் குளைகுடா பகுதியில் பலத்த சூறைக்காற்று வீசி வருவதால் மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்று கடந்த 15ந்தேதி இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்தது. இதையடுத்து மீனவர்கள் படகுகளைகரையோரம்நிறுத்தி வைத்திருந்தனர்.

இதற்கிடையே கடலில் காற்றின் வேகம் குறைந்ததையடுத்து மண்டபம் பகுதி மீனவர்கள் நேற்று முன்தினமும், நேற்று காலை ராமேசுவரம் மீனவர்களும் கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர். அதன்படி ராமநாதபுரம் மாவட்டம், ராமேசுவரத்தில் இருந்து நேற்று காலை 497 விசைப்படகுகளில் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அனுமதி பெற்று கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர்.

இன்று அதிகாலையில் பெரும்பாலான படகுகள் இந்திய கடல் எல்லையை ஒட்டிய கச்சத்தீவுநெடுந்தீவுக்கு இடையே வலைகளை விரித்து மீன்பிடித்து கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த இலங்கை கடற்படைக்கு சொந்தமான 2 குட்டி ரோந்து கப்பல்கள் அதிவேகமாக மீனவர்களின் படகுகளை நோக்கி வந்தது.

இதைப்பார்த்து அச்சமடைந்த மீனவர்கள் கடலில் விரித்திருந்த வலைகளை சுருட்டிக் கொண்டு அங்கிருந்து புறப்பட தயாரானார்கள். ஆனாலும் ஒரு சில படகுகளில் இருந்த மீனவர்கள் மீது அவர்களின் படகுக்குள் தாவிக்குதித்த இலங்கை கடற்படையினர் சரமாரியாக தாக்குதல் நடத்தி மீன்பிடிக்க விடாமல் விரட்டியடித்தனர்.

இந்த கொடூரதாக்குதலின் உச்சக்கட்டமாக ஈஸ்டர் ஆரோக்கியதாஸ் என்பவரது விசைப்படகு மீது தங்களது பலம் வாய்ந்த ரோந்து கப்பலை வைத்து மோதி படகை உடைத்து சேதப்படுத்தினர். இதில் படகில் இருந்த 5 மீனவர்கள் அதிர்ஷ்டவசமாக அவர்களின் பிடியில் இருந்து உயிர் தப்பி கரைக்கு வந்து சேர்ந்தனர்.

மேலும் ஈசாக் ராபீன், செல்வக்குமார் ஆகியோருக்கு சொந்தமான இரண்டு விசைப்படகுகளை சுற்றி வளைத்த கடற்படையினர் அதில் இருந்த சகாய ராபர்ட் (வயது 49), ராதா (44), முத்துராமலிங்கம் (51), யாக்கோப்பு (24), ஹரி கிருஷ்ணன் (50), இவரது மகன்கள் பொன் ராமதாஸ் (26), ராம்குமார் (24), லிபின்ராஜ் உள்ளிட்ட 9 மீனவர்களை கைது செய்து காங்கேசம் துறைமுகத்திற்கு அழைத்து சென்றனர்.

இரண்டு படகுகள் மற்றும் அதில் பிடித்து வைத்திருந்து மீன்களை பறிமுதல் செய்தனர். மேலும் 9 மீனவர்கள் மீது எல்லை தாண்டி மீன்பிடித்ததாக வழக்கு பதிவு செய்யும் பணியில் இலங்கையில் அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். மீன்பிடிக்க சென்ற 9 மீனவர்களில் 8 மீனவர்கள் குறித்த விபரம் மட்டுமே உள்ளது. ஒரு மீனவர் குறித்து எந்தவொரு விபரமும் தெரியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், மீனவ சங்கத்தலைவர் சாகயம் கூறியதாவது:

ராமேசுவரத்தில் மீன்பிடி தடைகாலம் நிலைவடைந்து மீன்பிடிக்க சென்ற நிலையில் ராமேசுவரம் மீனவர்கள் 22 பேருடன் மூன்று படகுகள் பறிமுதல், இதன் பின்னர் பாம்பன், நம்பு தாளை மீனவர்கள் 25 பேருடன் நான்கு நாட்டுப்படகு பறிமுதல் செய்யப்பட்டது. இந்தநிலையில் இன்று 9 மீனவர்களுடன் இரண்டு படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இலங்கை கடற்படையினர் இந்த செயலுக்கு கடும் கண்டனம் தெரிவிப்பதுடன் மீனவர்கள் மற்றும் படகுகளை விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கிறேன் என்றார். படகுகளையும், மீனவர்களையும் மீட்கவில்லையென்றால் ராமேசுவரத்தில் மீன்பிடி தொழில் முடங்கி விடும் எனவும் அவர் ஆதங்கம் தெரிவித்தார்.

# ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 70 ஆயிரம் கனஅடியாக சரிவு



ஒகேனக்கல், ஜூலை 25

கர்நாடகா, கேரளா மாநிலத்தில் தென் மேற்கு பருவமழை தீவிரமடைந்து உள்ளது. இதனால் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளானகுடகு, வயநாடு உள்ளிட்ட இடங்களில் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது.இதன்காரணமாக கர்நாடக மாநிலத்தில் உள்ள கபினி அணை மற்றும் கிருஷ்ணராஜசாகர் அணைகள் நிரம்பின.

இந்த நிலையில் கர்நாடக காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்கிற மழையை பொறுத்து இரு அணைகளில் இருந்தும் தமிழகத்திற்கு திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு அதிகரிப்பதும், குறைப்பதுமாக உள்ளது.

இதனால் ஒகேனக்கல்லுக்கு தண்ணீர் வரத்து கூடுவதும், குறைவதுமாக இருந்து வருகிறது.

நேற்று முன்தினம் மாலை ஒகேனக்கல்லுக்கு வினாடிக்கு 74 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்தது. இது சற்று அதிகரித்து நேற்று காலை 6 மணி நிலவரப்படி வினாடிக்கு 77 ஆயிரம் கனஅடியானது. இந்த நீர்வரத்து குறைந்து வினாடிக்கு 70 ஆயிரம் கனஅடியாக நீடித்து வருகிறது.

நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்தும், குறைந்தும் வருவதால் மெயின் அருவி, சினிபால்ஸ், ஐந்தருவிகளை மூழ்கடித்தவாறு காவிரி ஆற்றில் தண்ணீர் சீறிப் பாய்ந்து செல்கிறது. மேலும் அருவிக்கு செல்லும் நடைபாதைகளை மூழ்கடித்தவாறு தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது.


கர்நாடக அணைகளில் இருந்து தொடர்ந்து தண்ணீர் திறந்து விடப்பட்டு வருவதால் காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரிப்பு காரணமாக கரையோர பகுதியில் உள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளன.

மேலும் சுற்றுலா பயணிகள் அருவியில் குளிக்கவும், பரிசல் சவாரி செய்யவும் விதிக்கப்பட்ட தடை தொடர்ந்து 8வது நாளாக நீடிக்கிறது.

இதற்கிடையே காவிரி ஆற்றில் வரும் நீர்வரத்தை காவிரி நுழைவிட கர்நாடகதமிழக எல்லையான பிலிகுண்டுலுவில் உள்ள மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023
25.7.2024

## ஓ.டி.டி.யில் வெளியாகும் சஞ்சய் தத்தின் 'குட்சாடி' படம்




பிரபல பாலிவுட் நடிகர் சஞ்சய் தத். இவர், தமிழில் லோகேஷ் கனகராஜ் இயக்கிய விஜய்யின் லியோ படத்தில் வில்லனாக நடித்து பாராட்டுகளை பெற்றவர். இவர் தற்போது 'ஹவுஸ்புல் 5' என்ற படத்தில் நடித்து வருகிறார்.

நடிகர் சஞ்சய் தத் மற்றும் ரவீனா டாண்டன் நடித்த 'குட்சாடி' படத்தினை பின்னாய் கே காந்தி இயக்கியுள்ளார். மேலும், இந்தப்படத்தில் பார்த் சம்தான் மற்றும் குஷாலி குமார் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

அனைவராலும் எதிர்பார்க்கப்பட்ட 'குட்சாடி' படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளனர். அதன்படி, இது குறித்த பதிவினை நடிகர் சஞ்சய் தத் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். அதில் வருகிற ஆகஸ்ட் 9ந் தேதி ஜியோசினிமாபிரீமியம் ஓ.டி.டி தளத்தில் வெளியிடப்பட உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப்படம் காதல், குடும்பம் மற்றும் சமூக எதிர்ப்புகள் அடங்கிய படமான அமைந்துள்ளது.

## 'பாகுபலி' படத்தில் நடிக்க மறுத்த முன்னணி தமிழ் நடிகர் யார் தெரியுமா?



தெலுங்கில்மட்டுமல்லாதுஇந்தியளவில்பிரமாண்ட இயக்குனர்களுக்கான பட்டியலில் முதலிடத்தில் இருப்பவர் எஸ்.எஸ்.ராஜமவுலி. நான் ஈ, பாகுபலி, ஆர்.ஆர்.ஆர் உள்ளிட்ட படங்களால் இவர் மிகவும் பிரபலமானார்.

தற்போது இவர் படத்தில் நடிப்பது நடிகர்களின் கனவாக உள்ளது.

முன்பு, இவர் படத்தில் நடிக்க வாய்ப்பு கடைத்தபோதிலும்சிலநடிகர்கள்மறுத்திருக்கின்றனர். அதற்கு சிறந்த உதாரணம் தமிழில் முன்னணி நடிகராக இருக்கும் சூர்யா. ராஜமவுலி படத்தில் பணிபுரியும் வாய்ப்பை இழந்ததாக பல பேட்டிகளில் சூர்யாவே கூறியுள்ளார்.

இது குறித்து சூர்யா, பாகுபலியில் ஒரு குறிப்பிட்ட கதாபாத்திரத்தில் நடிக்க ராஜமவுலி தன்னை அணுகியதாகவும், ஆனால், தான் அதை மறுத்ததாகவும் தெரிவித்திருந்தார். மேலும், இந்த முடிவுக்கு வருத்தம் தெரிவித்த சூர்யா, பாராட்டப்பட்ட இயக்குனருடன் பணிபுரியும் மற்றொரு வாய்ப்பை இழக்க மாட்டேன் என்றும் கூறினார்.

## மலையாள ஹாரர் படங்கள் ஓடிடியில் உள்ளன



பாலிவுட் படங்களோடு போட்டியிடும் அளவிற்கு நல்ல தென்னிந்திய படங்கள் தற்போது வெளியாகின்றன. இதனால் நாடு முழுவதும் தென்னிந்திய படங்களுக்கு ரசிகர்கள் உள்ளனர். இதற்கு மிக முக்கிய பங்கு மலையாளபடங்களுக்கு உண்டு. மலையாளத்தில் ஹாரர்படங்கள் குறைவு என்றாலும், சில நல்ல ஹாரர் படங்கள் ஓடிடியில் உள்ளன. அதன்படி, டாப் 5 மலையாள ஹாரர் படங்களை தற்போது பார்க்கலாம்.

1.பிரமயுகம்(bramayugam) ராகுல் சதாசிவம் எழுதி இயக்கிய இப்படத்தில் மம்முட்டி முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். கடந்த பிப்ரவரி மாதம் 15ம் தேதி வெளியான இப்படம் தற்போது சோனி லிவ் ஓடிடி தளத்தில் உள்ளது.

2.எஸ்ரா(Ezra) பிரித்விராஜ், பிரியா ஆனந்த் நடிப்பில் கடந்த 2017ம் ஆண்டு வெளியான இப்படத்தை ஜெயகிருஷ்ணன் இயக்கியிருந்தார். தற்போது இப்படத்தை டிஸ்னி பிள்ஸ் ஹாட்ஸ்டாரில் கணலாம்.

3.நீல வெளிச்சம் (Neelavelicham) ஆசிக் அபு இயக்கி கடந்த ஆண்டு வெளியான இப்படத்தில் டொவினோ தாமஸ், ரீமா கல்லிங்கல் மற்றும் ரோஷன் மேத்யூ ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்தனர். நீல வெளிச்சம் தற்போது அமேசான் பிரைமில் உள்ளது.

4.9 பிரித்வி ராஜ், பிரகாஷ் ராஜ், மம்தா மோகன்தாஸ் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்த இப்படத்தை ஜென்சு முகமது இயக்கினார். இப்படத்தை தற்போது அமேசான் பிரைமில் காணலாம்.

5. பீனிக்ஸ்(Phoenix) விஷ்ணு பரதன் இயக்கத்தில் கடந்த ஆண்டு வெளியான இப்படத்தில் அபிராமி போஸ், சந்துநாத், நில்ஜா ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்தனர். இப்படம் தற்போது அமேசான் பிரைமில் உள்ளது.

## 'மிஸ்டர் பச்சன்': போஸ்டர் வெளியிட்டு ரிலீஸ் தேதியை அறிவித்த ரவி தேஜா



தெலுங்கு சினிமாவில் முன்னணி நடிகராக இருப்பவர் ரவி தேஜா. 'மாஸ் மகாராஜா' என்று ரசிகர்களால் அழைக்கப்படும் இவர் தனது திரையுலக வாழ்க்கையை 'கர்தவ்யம்' படத்தில் மூலம் தொடங்கினார். பின்னர், பெங்கால் டைகர், ராஜா தி கிரேட், வால்டேர் வீரய்யா போன்ற திரைப்படங்களில் நடித்து ரசிகர்களை கவர்ந்தார். தற்போது இவர் ஹரிஸ் ஷங்கர் இயக்கிய 'மிஸ்டர் பச்சன்' படத்தில் நடித்துள்ளார். இந்த படத்தில் பாக்யஸ்ரீ போர்ஸ் கதாநாயகியாக நடித்துள்ளார். மேலும் சுபலேகா சுதாகர் மற்றும் ஜெகபதி பாபு ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இந்தநிலையில், இந்த படத்தின் ரிலீஸ் தேதியை போஸ்டர் வெளியிட்டு ரவி தேஜா அறிவித்துள்ளார். அதன்படி, வருகிற ஆகஸ்ட் 15ந் தேதி திரையரங்குகளில் வெளியாகும் என்று தெரிவித்துள்ளார்.

## கொட்டுக்காளி படத்தின் ரிலீஸ் தேதியை அறிவித்த படக்குழு!




நடிகர் சிவகார்த்திகேயன் தமிழ் சினிமாவில் நடிகராகவும் பாடகராகவும் பாடல் ஆசிரியராகவும் வலம்வருகிறார்.அத்துடன்இவர்தயாரிப்பாளராகவும் உருவெடுத்து பல படங்களை தனது எஸ்கே புரோடக்சன்ஸ் நிறுவனத்தின் மூலம் தயாரித்து வருகிறார். அந்த வகையில் சூரி நடிப்பில் உருவாகியுள்ள கொட்டுக்காளி எனும் திரைப்படத்தையும் சிவகார்த்திகேயன் தயாரித்திருக்கிறார். இந்த படத்தை கூழாங்கல் படத்தின் இயக்குனர் பி எஸ் வினோத் ராஜ் இயக்கியுள்ளார்.

இதில் சூரியுடன் இணைந்து அன்னா பென் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். சூரி இந்த படத்தில் எதிர்மறை கதாபாத்திரத்தில் நடித்துள்ளதாக சொல்லப்படுகிறது. அதேசமயம் இந்த படமானது ரிலீஸுக்கு முன்பே பல சர்வதேச திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டு பார்வையாளர்களிடம் பாராட்டுகளை பெற்று வருகிறது.

இந்நிலையில் இந்த படத்தின் ரிலீஸ் குறித்த அறிவிப்பை படக்குழு வெளியிட்டுள்ளது. அதன்படி இந்த படமானது வருகின்ற ஆகஸ்ட் மாதம் 23 ம் தேதி திரையரங்குகளில் வெளியாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## அக்சய் குமாரின் 'கேல் கேல் மெய்ன்' படத்தின் ரிலீஸ் தேதி அறிவிப்பு




பாலிவுட் திரையுலகில் முன்னணி நடிகர்களில் ஒருவராக இருப்பவர் அக்சய் குமார். 56 வயதாகும் இவர், தமிழில் ரஜினியுடனான 2.0 திரைப்படத்தில் நடித்திருந்தார். சமீபத்தில் இவரின்நடிப்பில் வெளியான ஓஎம்ஜி 2 திரைப்படம் திரையரங்குகளில் வெளியாகி நல்ல வரவேற்பைப் பெற்றது. இதனை தொடர்ந்து, நடிகர் சூர்யாவின் நடிப்பில் வெளியான 'சூரரைப் போற்று' படத்தினை இந்தியில் 'சர்பிரா' என்ற பெயரில் ரீமேக் செய்து வெளியானது.

தற்போது, நடிகர் அக்சய் குமார் 'கேல் கேல் மெய்ன்' என்ற படத்தில் நடித்துள்ளார். இந்த படத்தில் டாப்ஸி , பர்தீன் கான், வாணி கபூர், அம்மி விர்க், ஆதித்யா சீல் மற்றும் பிரக்யா ஜெய்ஸ்வால் உள்ளிட்ட நட்சத்திர நடிகர்கள் நடித்துள்ளனர். வக்காவ் பிலிம்ஸ் மற்றும் கேகேஎம் பிலிம் புரொடக்சன் நிறுவனங்கள் இணைந்து இப்படத்தினை தயாரித்துள்ளது.

இந்த நிலையில், இந்த படத்தின் புதிய அப்டேட்டை அக்சய் குமார் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். அதில் இந்தப்படம் வருகிற ஆகஸ்ட் 15ந் தேதி வெளியாகும் என்று குறிப்பிட்டுள்ளது.

மேலும் இப்படம், அதே தேதியில் வெளியாகும் ஜான் ஆபிரகாமின் 'வேதா', ஷ்ரத்தா கபூர் மற்றும் ராஜ்குமார் ராவின் 'ஸ்ட்ரீ 2' ஆகிய படங்களுடன் மோதவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது

## அவர்களின் பணிச்சுமையை நிர்வகிக்க வேண்டியது முக்கியமானதாகும் கம்பீர்



இந்திய கிரிக்கெட் அணி, இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து மூன்று 20 ஓவர் மற்றும் 3 ஒருநாள் போட்டியில் விளையாடுகிறது. இந்தியாஇலங்கை அணிகள் இடையிலான 20 ஓவர் போட்டி வருகிற 27, 28, 30ந் தேதிகளில் பல்லகெலேவிலும், ஒருநாள் போட்டி ஆகஸ்டு 2, 4, 7ம் தேதிகளில் கொழும்பிலும் நடக்கிறது. இந்த தொடரில் விளையாடுவதற்காக இந்திய அணி மும்பையில் இருந்து விமானம் மூலம் நேற்று பிற்பகல் இலங்கைக்கு புறப்பட்டு சென்றது. முன்னதாக இந்திய அணியின் புதிய தலைமை பயிற்சியாளர் கவுதம் கம்பீர், தேர்வு குழு தலைவர் அகர்கர்ஆகியோர்மும்பையில்நிருபர்களைசந்தித்தனர். அப்போது பயிற்சியாளராக நியமிக்கப்பட்ட பிறகு முதல்முறையாக பேட்டியளித்த கம்பீர் கூறியதாவது:

பேட்ஸ்மேன்களை பொறுத்தமட்டில் தொடர்ந்து விளையாட முடிந்தால், நல்ல பார்மில் இருந்தால் எல்லா போட்டிகளிலும் ஆடலாம். ரோகித் சர்மா, விராட் கோலி 20 ஓவர் போட்டியில் இருந்து ஓய்வு பெற்று விட்டதால் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டியில் மட்டுமே ஆடுவார்கள். எனவே அவர்கள் இனிமேல் பெரும்பாலான போட்டிகளில் விளையாடுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். ஆனால் வேகப்பந்து வீச்சாளர்களின் பணிச்சுமையை சரியாக நிர்வகிக்க வேண்டியது முக்கியமானதாகும். பும்ரா போன்ற பவுலர்களுக்கு போதிய ஓய்வளித்து முக்கியமான போட்டிக்கு புத்துணர்ச்சியுடன் வைத்திருக்க வேண்டியது எங்கள் பொறுப்பாகும். பும்ரா மட்டுமின்றி வேகப்பந்து வீச்சாளர்களின் பணிச்சுமையை சிறப்பாக கையாள வேண்டியது மிகவும் முக்கியமானதாகும். இவ்வாறு அவர் கூறினார்.

## இப்போதும் பாண்ட்யா இந்திய அணியின் கேப்டனாக முடியும் ராபின் உத்தப்பா



இந்திய கிரிக்கெட் அணி விரைவில் இலங்கைக்கு சென்று அந்த நாட்டு அணிக்கு எதிராக மூன்று 20 ஓவர் மற்றும் 3 ஒரு நாள் போட்டிகளில் விளையாடுகிறது. 20 ஓவர் ஆட்டங்கள் வருகிற 27, 28, 30ம் தேதிகளில் பல்லகெலேவிலும், ஒரு நாள் போட்டிகள் ஆகஸ்டு 2, 4, 7ம் தேதிகளில் கொழும்பிலும் நடைபெறுகிறது.

இலங்கை தொடருக்கான இந்திய கிரிக்கெட் அணி சமீபத்தில் அறிவிக்கப்பட்டது. தேர்வு குழு தலைவர் அஜித் அகர்கர் தலைமையிலான கமிட்டியினர், புதிய பயிற்சியாளர் கவுதம் கம்பீர் ஆகியோரின் ஆலோசனைக்கு பிறகு அணி பட்டியல் இறுதி செய்து வெளியிடப்பட்டது.

உலகக்கோப்பையை வென்றதுடன் சர்வதேச டி20 கிரிக்கெட்டில் இருந்து ரோகித் சர்மா விடைபெற்று விட்டதால் இந்திய 20 ஓவர் அணியின் புதிய கேப்டன் யார் என்ற கேள்வி எழுந்தது. உலகக்கோப்பையில் துணை கேப்டனாக பணியாற்றிய ஆல்ரவுண்டர் ஹர்திக் பாண்ட்யா கேப்டனாக நியமிக்கப்படலாம் என்று தகவல்கள் வெளியாகின.

ஆனால் பாண்ட்யாவுக்கு அடிக்கடி உடல்தகுதி பிரச்சினை ஏற்படுவதால் அவருக்கு பதிலாக அதிரடி பேட்ஸ்மேன் சூர்யகுமார் யாதவை கேப்டனாக நியமிப்பதே சரியாக இருக்கும் என்பது பயிற்சியாளர் கம்பீரின் விருப்பமாக இருந்தது. முடிவில் இந்திய 20 ஓவர் அணியின் கேப்டன்ஷிப் 33 வயதான சூர்யகுமார் யாதவிடம் வழங்கப்பட்டுள்ளது.

துணை கேப்டன் பதவியும் பாண்ட்யாவிடம் இருந்து பறிக்கப்பட்டு இருக்கிறது. சுப்மன் கில் இனி துணை கேப்டனாக செயல்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் தேர்வுக்குழு பாண்ட்யாவுக்கு அநியாயத்தை செய்து விட்டதாக ஸ்ரீகாந்த், சஞ்சய் பங்கர் போன்ற முன்னாள் வீரர்கள் விமர்சித்தனர்.

இந்நிலையில் வேகப்பந்து வீச்சு ஆல் ரவுண்டரான ஹர்திக் பாண்ட்யா இதற்காக வருந்தக்கூடாது என முன்னாள் வீரரான ராபின் உத்தப்பா தெரிவித்துள்ளார். அத்துடன் சூரியகுமார் காயத்தை சந்தித்தால் டி20 கேப்டன்ஷிப் பாண்ட்யாவுக்கு வரும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் பேசியது பின்வருமாறு: "உண்மையில் பாண்ட்யாவின் இடத்தில் நான் இருந்திருந்தால் குறிப்பிட்ட அளவிற்கு என்னை கவனித்துக் கொள்வேன். ஏனெனில் இந்திய கிரிக்கெட்டில் வேகப்பந்து வீச்சு ஆல் ரவுண்டர் என்பது மிகவும் அரிதான பொருளாகும். குறிப்பாக நான் பாண்ட்யாவை போல இருந்தால் நீண்ட காலம் தொடர்ந்து விளையாடுவதற்கு விரும்புவேன். அந்த வேளையில் கேப்டன்ஷிப் பறிக்கப்பட்டால் பரவாயில்லை நாட்டுக்காக சரி என்று நான் சொல்வேன். ஆம் இந்தியாவின் கேப்டனாக நாட்டை வழி நடத்துவது நினைத்துப் பார்க்க முடியாத மிகப்பெரிய கவுரவம்.

இருப்பினும்கேப்டன்ஷிப்பொறுப்புஇல்லாமலேயேநீண்டகாலம்விளையாடிஉங்களால்நாட்டுக்காகமுடிந்தளவுக்கு நிறைய சாம்பியன் பட்டங்களை வென்று கொடுக்க முடியும். தற்போது பாண்ட்யாவால் வெள்ளைப்பந்து கிரிக்கெட்டில் விளையாடுவதற்கு தயாராக இருக்க முடிகிறது. எனவே அவரது இடத்தில் நான் இருந்தால் அனைத்தையும் கடவுளின் கையில் விட்டு விடுவேன். ஒருவேளைகடவுள்நினைத்து சூர்யகுமார்காயமடையும் சூழ்நிலை வந்தால் இந்திய அணியை வழி நடத்துவதற்கு நான் (பாண்ட்யா) எப்போதும் தயாராக இருப்பேன்" என்று கூறினார்.

## டி20 உலகக்கோப்பையை வென்றபோது அவர் கண்களில் வலியை பார்த்தேன் அஸ்வின்



அமெரிக்கா மற்றும் வெஸ்ட் இண்டீசில் நடைபெற்ற ஐ.சி.சி. டி20 உலகக்கோப்பை தொடரில் இந்தியா சாம்பியன் பட்டம் வென்றது. இதில் கடந்த மாதம் 29ம் தேதி நடைபெற்ற இந்த தொடரின் இறுதிப்போட்டியில் இந்திய அணி 7 ரன் வித்தியாசத்தில் தென் ஆப்பிரிக்காவை வீழ்த்தி 2வது முறையாக கோப்பையை உச்சிமுகர்ந்தது. இதில் இந்தியா நிர்ணயித்த 177 ரன் இலக்கை நோக்கி ஆடிய தென் ஆப்பிரிக்கா ஒரு கட்டத்தில் 4 விக்கெட்டுக்கு 151 ரன்களுடன் வலுவான நிலையில் இருந்தது. அப்போது அந்த அணிக்கு 24 பந்தில் 26 ரன் மட்டுமே தேவையாக இருந்தது.

ஆனால் அங்கிருந்து கம்பேக் கொடுத்த இந்தியா கோப்பையை வென்று அசத்தியது. அந்த வெற்றியுடன் கேப்டன் ரோகித்சர்மா, விராட் கோலி, ரவீந்திரஜடேஜா ஆகியோர்சர்வதேசடி20கிரிக்கெட்டில்ஓய்வு பெற்றனர். அதேபோல வீரராக வெல்லாத உலகக்கோப்பையை பயிற்சியாளராக வென்று ராகுல் டிராவிட் விடை பெற்றார்.

இந்நிலையில் 2007ல் ஒருநாள் உலகக்கோப்பையில் தோல்வியை சந்தித்த அதே வெஸ்ட் இண்டீஸ் மண்ணில் இம்முறை டிராவிட் பயிற்சியாளராக உலகக்கோப்பையை வென்றதாக ரவிச்சந்திரன் அஸ்வின் பாராட்டியுள்ளார். மேலும் உலகக் கோப்பையை கொடுத்த விராட் கோலியை கட்டிப்பிடித்து அழுத ராகுல் டிராவிட் ஆனந்தக் கண்ணீரில் 2007 வலியை பார்த்ததாகவும் அஸ்வின் தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் பேசியது பின்வருமாறு:"ராகுல் டிராவிட்டை அழைத்து விராட் கோலி கோப்பையை கொடுத்ததே எனக்கு பிடித்த தருணம். அதை வாங்கிய டிராவிட் அவரை கட்டிப்பிடித்து அழுதார். அப்போது அவர் கண்களில் வலியை பார்த்தேன். இங்கே நான் ஒரு புனிதமான நபரை பற்றி பேச விரும்புகிறேன். குறிப்பாக 2007ல் நடைபெற்ற ஒருநாள் உலகக்கோப்பையில் டிராவிட் தலைமையில் இந்தியா நாக் அவுட் செய்யப்பட்டது. அதனால் அந்த காலகட்டங்களில் இந்தியா ஒரு போட்டியில் தோற்றால் உடனே ராகுல் டிராவிட் என்ன செய்கிறார் என்று கேட்டனர்.

அப்படிப்பட்ட ராகுல் டிராவிட் கடந்த 2 3 வருடங்களாக இந்திய அணியில் என்ன செய்தார் என்பதை நான் அறிவேன். மிகவும் சமநிலையுடன் இருந்த அவர் இந்திய அணியின் அணுகுமுறையை மாற்ற எவ்வளவு கடினமாக உழைத்தார் என்பதும் எனக்கு தெரியும். வீட்டிலிருந்த போது கூட அணியின் வெற்றிக்காக திட்டமிட்ட அவர் ஒவ்வொரு வீரருக்கும் என்ன செய்தார் என்பதும் தெரியும்" என்று கூறினார்.

## ஒலிம்பிக் தொடருடன் டென்னிஸ் போட்டியிலிருந்து ஓய்வு ஆண்டி முர்ரே அறிவிப்பு




33வது ஒலிம்பிக் போட்டி பிரான்ஸ் தலைநகர்பாரீசில்வருகிற 26ம் தேதி கோலாகலமாக தொடங்குகிறது. 206 நாடுகளை சேர்ந்த 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் பங்கேற்கிறார்கள்.

இந்நிலையில் டென்னிஸ் போட்டிகளில் முன்னணி வீரரான ஸ்காட்லாந்தை சேர்ந்த ஆண்டி முர்ரே, பாரீஸ் ஒலிம்பிக் தொடருடன் டென்னிசிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

இது குறித்து தனது எக்ஸ் பக்கத்தில், "எனது கடைசி டென்னிஸ் போட்டிக்காக பாரீஸ் வந்துள்ளேன். நாட்டிற்காக போட்டியிட்டது எனது வாழ்க்கையின் மறக்கமுடியாத வாரங்களாகும், கடைசியாக அதைச் செய்ததில் நான் மிகவும் பெருமைப்படுகிறேன்!" என்று பதிவிட்டுள்ளார்.

ஆண்டி முர்ரே ஒலிம்பிக் போட்டிகளில் இருமுறை ஒற்றையர் பிரிவில் தங்கப் பதக்கம் வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது



**மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்**
**பெருந்தகை யான்கண் படின்**

**விளக்கம்:**
ஒப்புரவாகிய பெருந்தகைமை உடையவனிடத்து செல்வம் சேர்ந்தால் அஃதுஎல்லாஉறுப்புகளுக்கும்மருந்தாகிப் பயன்படத் தவறாத மரம் போன்றது.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.